உ

ஸ்ரீ குமரன்றுணை

கதிர்காம கந்தப்பா.

கதிர்காம இராஜாசாமி
இயற்றியது.

கணேசர் அச்சுக்கூ
காரைக்குடி
193

கதிர்காமப்பெருமான்.



கதிர்காம இராஜாசாமி.

இராஜமன்னார்குடி, (தஞ்சாவூர் ஜில்லா.)

கதிர்காமம்.

தனன னன தனனன தனன னன தனனன

தனன னன தனனன—தனதான

உலக மேக பொருளாகி பொருள னேக விளைவாகி
உயிரி லேறி விளையாட லறியாயோ

உடலி னோடு மனமாய்கை விடவி டாத படிஞான
உருபெ றாத வொருசிவ குருநாதா

நிலவு போல வொளிவீசு முகமதாகு விழிவாளை
நிகர தான குயிலோசை குறமாது

நினைவு மாறி விரைவாக புனம தோடி மகிழாகி
நெடிய தோளி லணைகோல மணவாளா

அலகை கூளி திமியாட எதிரி சூர னுடல்கீறி
அழிய நேரி லெழுதீர திருமேனி

அரவு சீறு படபாயி னிடையி லேறி பலதேவர்
அணைய வேத யினுவோனின் மருகோனே

கலக மாகி சபைமீது குறைகள் கூறு மவர்காண
கடுகி நாக நட மாடு நடராஜா

காடி யானை வனமாறி கருணை வாச புரமாகு
கதிர காம பதிமேவு பெருமானே

நூற்றுக்கணக்காய் எழுதி முடிந்துள்ளது.

அட்டமாசித்தி.

பட்டமங்கலம்.

தத்த தந்தனத் தத்தன தத்தன — தனதான

உற்ற சங்கையற் றுத்துநி லைப்பவ
ரப்ப டங்களுக் கொப்பிம தித்தினி
வுற்ப வங்களைப் பற்றிப ழிப்பவ ரறியாயோ

உத்த மங்குணக் கற்பும னக்கனி
யிற்பு குங்கனச் சத்துவி ழித்திடு
முக்ர முந்தரத் தத்துவ முற்பவ குருநாதா

பெற்று நம்பிபொப் பித்துதி னைப்புன
முற்றி டுங்கதிர்க் கொத்துகி ளிக்குயில்
பிய்க்க வுங்கரக் கற்கவ ணைச்சொரி குறமாது

பித்தெ னும்மனப் பற்றுக ளைத்தய
ரத்தி டம்பெறச் சற்றுத ணிப்பெற
பெற்று வம்பிடத் தொட்டும ணப்புறு மணவாளா

வெற்றி லங்கையைப் பற்பவ ளக்கடல்
சுற்றி யும்பெருப் பட்டண மொட்டெழ
விட்டி டுங்கொடுச் சத்திய மற்றவன் திருமேனி

வெட்டி யுந்தலைச் சக்கர முற்றறு
பட்டு முன்விழக் கெக்கலி சொற்பொழி
விற்பெ ரும்புயத் தத்துவ நித்தியன் மருகோனே

பற்று டன்புறக் கத்திக ளைச்சபை
மத்தி யின்புறக் கட்டிபி டித்திட
பக்தி யின்மனக் கெட்டிநி லைப்பமை கதிர்காமா

பட்ச முங்கொளப் பற்றுமு ளைத்தர
சொக்கி டுந்தவப் பட்டண மத்திரு
பட்ட மங்கலத் துற்றுந டித்திடு பெருமானே

அம்பாளூரணி.

தந்தா தானன தானன தந்தா தானன தானன
தந்தா தானன தானன தனதான

அஞ்சே சிவத யாபர மன்றே ராஜச தாசிவ
அந்தோ வோருரு வானது அறியாயோ

அன்பா லோதுவ தேபுக ழுங்கா ணீயென வேயிதை
அண்டா தீயமை மாநட குருநாதா

நஞ்சோ சேலெனு வாள்விழி கொம்போ கேரிழை யாளிடை
நம்பீ ராஜம னோகரி குறமாது

நன்றாய் நாரத மாமுனி சென்றே வாய்மொழி யோதிட
நைந்தே போயவள் தோளணை மணவாளா

கஞ்சா லாகிரி சூரகு லம்போய் தீயவு மோர்கணை
கண்டே யேவிடு மாதவ திருமேனி

கந்தா நாமக மோவென கொண்டே கூடிடு கார்முகில்
கண்ணோன் சாமள மேனியன் மருகோனே

அஞ்சா தேயென மாசபை நின்றா ரோமென கூவிட
அன்றா டீயகு மாரனெ கதிர்காமா

அன்பா யோதிய தேபுகழ் இன்பா நீயணை வாய்நிதம்
அம்பா ளூரணி மேவிய பெருமானே

இது பேரையூருக்குச் சமீபம்

உமையாள்புரம்.

தனனா தனதன தந்தன தனதன தனதான

அளகா புரியென யென்றமை
தலமிது அறியாயோ

அறிவா கிடுமொரு தன்னிலை
பொலிவுறு குருநாதா

வளமா புனமது தங்கிடு
மதிமுக குறமாது
வடிவா ளுறவுக லந்தவள்
புயமணே மணவாளா
இளகா மனமுள லங்கய
னழிவுற திருமேனி
இடமே விடுபட பஞ்சணே
துயிலுவன் மருகோனே
உளமோ ரதிசய மும்பெற
திருநட கதிர்காமா
உமையாள் புரமுறு மங்கள
குணகண பெருமானே

இஃது கடியாபட்டியென வழங்கும் ராமச்சந்திரபுரத்திற்கும் ராயவரத்திற்கும் இடையில் உள்ளது. உமையாள்புரம் உமை தேவமாலே யென்று சந்த விருத்தம் பல பாடிமுடிந்திருக்கின்றது.

கோனுபட்டு.

தான தத்தா தத்தன தனதன தனதான

பேரா ரக்கா லத்தவ ரனுபவ
நூலா கப்பே ரிட்டவ ரகலவு
பேசா தச்சா மிப்பல திரிகிற தறியாயோ

பேதா திப்பே தத்தினி லினிசிவ
போகா திச்சூ ழிட்டது மனவெளி
பேயா டிச்சா திப்பது முழுமுதல் குருநாதா

தீரா தக்கா மத்தின ளிளநகை
நோகா தப்பூ மிக்கொரு திருமகள்
சீரா ளச்சோ லேக்குயி லெனவுறு குறமாது

தோடா துத்தே டிப்புன மணுகிட
ஆடா டிப்பா டுப்பல விளைவுற
சீரா கப்பே சித்திரு புயமணை மணவாளா

சூரா திச்சூ ரப்படை மிகுபல
வாரா கச்சூ ழத்தனை யிருபது
தோளோ டுத்தோ ளற்றறு விடுகணை திருமேனி

சூதா டிக்கா னுட்புகு தருமனு
மேவா ழத்தா னப்புற மவர்வர
தோதா கப்போ ரிட்டவ னுளமகிழ் மருகோனே

கோரா விட்டா லெப்படி யிதுமுறை
யாகா தப்பா வொப்பிடு மெனுசொல
கோணு மற்ரு வித்திரு நடமிடு கதிர்காமா

கோமா னிப்பூ விற்கொரு தனிமுத
லாமா மிக்கா ளித்திரு சிவதுறை
கோனு பட்டே வற்பெறு கிறபொது பெருமானே

ஆவணிப்பட்டி.

தானதத் தத்தன தந்தன தத்தன தனதானு

நாவெழக் கத்திம ணம்பெற வுற்றொரு
பூமணைச் சுற்றியி தம்பெறு சொற்பல
நாலுசொற் பத்திவ ழங்கவெ றுப்பவ ரறியாயோ

நாதவுற் பத்திம னந்தெளி நட்பறி
வோடுமெட் டுப்படு கின்றப தத்திடை
நாழியெட் டெட்டுட னின்றுவி ளக்கிடு குருநாதா

சீவிசிக் கற்றக ருங்குழ லுற்றவு
ளோலமிட் டுப்புன மெங்குவி ளிக்கிற
சீதசத் தக்குயி லின்ரெனி யொப்பிடு குறமாது

சேவகற் புக்கொடி செங்கரம் விட்டொரு
வேடசற் புத்திர னென்றுரு பெற்றிட
தேமனற் கச்சணி கொங்கைபி டித்தணை மணவாளா

தேவருக் கெப்பொழு தும்பல வக்ரம
மேபுரித் துட்டர்கு லந்தலை யற்றற
தீயதைப் பெற்றகொ டுங்கணை விட்டிடு திருமேனி

தேவிகற் புக்கொரு மங்களை முற்றவ
ளோடுசற் றுத்தணி யின்பும கிழ்த்தொரு
சீறுசர்ப் பப்பட பஞ்சணை யுற்றவன் மருகோனே

ஆவலுற் றச்சபை முன்புநெ ருக்ககொ
கோவெனக் கத்திக லங்கிம லைக்கவும்
ஆடுகற் புக்குள மன்றுந டித்திடு கதிர்காமா

ஆறுகுட் டைக்குள மும்பெரு கக்கரு
மேகமிட் டுப்பொழி யுந்திரு சத்திய
ஆவணிப் பட்டியி லென்றும ணப்புறு பெருமானே

செம்பனூர்.

தந்தன தனதன தந்தன தனதன
தந்தன தனதன தனதான

அஞ்சிகா சதுபெற சிந்துபா டிடபல
அம்புபாய் கிறமொழி அறியாயோ

அன்புமே விடமன மொன்றுகூ டிடுமது
அங்கைமே லுறுகனி குருநாதா

கொஞ்சிகூ விடுகுர லின்புகேள் கிளிகுயில்
கொண்டைகார் மழைநிகர் குறமாது

கொம்புபோ லிடைநடை மஞ்சுபோ லிருகன
கொங்கைதோ ளணைகுற மணவாளா

வஞ்சரா வணகுல நெஞ்சொடூ டுருவிட
வந்துநேர் விடுகணை திருமேனி

வண்டுபோ லிருவிழி கொண்டவோர் திருமகள்
வந்துமார் பணைபவன் மருகோனே

செஞ்சா ணமமென நின்பதா செதிதர
தெந்தனு நடமிடு கதிர்காமா

செங்நெலோ டுறுவய லுஞ்சிரு நிறைதன
செம்பனூர் பதிவளர் பெருமானே

கீழச்செவற்பட்டி.

தனத் தானத் தத்தன தந்தன தனதானு

நேசக் காணப் பக்கம றைந்துவி
நோதக் கோபச் சட்டம லிந்தவர்
நீளப்போகச் சொத்துனி றைந்தவ மறியாயோ

நீதப்பாலுக் கொப்பும னந்தெளி
வாகக் கோவிற் கட்டிவ ணங்கிட
நீதச் சாமிப் பற்றுப யன்றரு குருநாதா

பாரத் தாளச் செப்பெனு கொங்கையள்
மீறிப் பாயக் கச்சணி யுங்குழல்
பாரக் காரொப் பித்துவி ளங்கிடு குறமாது

பாடிக்கூவிக் கத்திடு மின்குர
லோசைக் காதுப் பொட்டென வுந்திரு
பாலக் காமப் பற்றில ணைந்திடு மணவாளா

சீரக் கோபக் கொற்றவன் லங்கைய
னோடுப் போரிற் சற்றுமு னிந்தவன்
தீயைக் கூடிச் சுற்றம ழிந்தெழு திருமேனி

சீதக் கோமள லக்குமி யின்பமை
நீலச் சாமள விற்புய முங்களி
தேவர்க் கோரரு மைப்பெரு மங்கள மருகோனே

சீரப் பாசொற் பற்றுகு ணங்கம
ழாகச் சோதித் தற்புத மென்றணை
கீதத் தோடுக் கற்புந டம்புரி கதிர்காமா

கேளிப் பாவிற் கொப்பிக டந்தவ
ரோடிப் பூமிச் சொந்நுநி றைந்தவர்
கீழச் சேவற் பட்டிம ணங்கமழ் பெருமானே

கொத்தமங்கலம்.

தத்த தந்தன தத்தன தானன தனதான

உற்ற துஞ்சொல கற்றறி வாளிவ
ருத்த மும்பெற சொற்பல பேசுவ
ருத்த ரந்தரு மற்பசி னேகித மறியாயோ

உட்பு றம்பத பற்றுத லாகிடு
மப்ப னுங்குண முட்டிடு வானொரு
வுத்த மம்பெறு சத்திய மேனிலே குருநாதா

பெற்ற நம்பிதி னேப்புன மேவிட
சத்த முங்குர லிட்டிடு வேலையை
பெற்ற மங்கைய ளற்புத மேதிரு குறமாது

பித்து டன்தலே சுற்றிட மோகமு
முட்டி யுங்கொடு மைத்தணி வேயுற
பித்த னுங்குண தத்தையி னோடணே மணவாளா

நற்ற வம்புரி யத்தகி யேவா
முற்ற துங்கொடு மைத்தொழி லேசெய
நட்பி னன்றலே பத்திரு தோளறு திருமேனி

நட்பு கொண்டுதி ரைக்கட லேயதில்
கற்பு மங்கள லக்குமி யோடணே
நற்ற வம்பல னத்திரு மாலினின் மருகோனே

கொற்ற வன்சபை கத்துவ தோடழ
தக்க ருந்திர விற்பன ரோஜெய
கொட்ட வுந்தகி தித்திமி மாநட கதிர்காமா

கொட்டு மின்னொரு மித்திடு காருட
னுற்றி டும்மழை பக்குவ மாகிட
கொத்த மங்கல நற்பதி வாழ்வுறு பெருமானே

ஆத்தங்குடி முத்துப்பட்டினம்.

தாத்தந் தனதத் தத்தத் தனதன தனதான

போற்றுங் கவியைச் சுட்டித்
தெளிவில ரறியாயோ

பூத்துங் குணமுத் துப்பெற்
றிடுமன குருநாதா

கூற்றுங் கயலொப் பக்கச்
சணிதன குறமாது

கூத்துந் திகிலிட் டெக்கிப்
புயமணை மணவாளா

எற்குங் குகனட் புப்பெற்
றிலகிய திருமேனி

ஏற்றுங் கடல்சர்ப் பத்துற்
றிடுபவன் மருகோனே

ஆற்றுங் குணமுற் றெப்பத்
திருநட கதிர்காமா

ஆத்தங் குடிமுத் துப்பட்
டணம் வளர் பெருமானே

இராயவரம்.

தானதான தன தானதான தன தானதான தன தனதான

நீலி போல வழு தோம நாம சிவ
நேசனுகி வா லறியாயோ

நீடு போக சுக வீடு தேட குண
நீத மாகு மன குருநாதா

கூலி யாளர் பல தோழி மார்க ளொடு
கூவி யாடு மிள குறமாது

கூட காமவெறி மீறி தேடி வன
கோதை மார்பி லணை மணவாளா

கோலி சீறு கட லூரை வேலி வளி
கோப சூர ரழி திருமேனி

கோலி நாக பட மீது யேறு சட
கோப நீதன் புகழ் மருகோனே

போலி பேசு சபை மீது காண வொரு
போத நாத குரு கதிர்காமா

போக வாழ்வு பெற மாரி யாகி வளர்
பூமி ராய வர பெருமானே

சோழபுரம்.

தான தான தன தான தான தன
தான தானன தானதானன தனதான

வேத மோதி யுண ராது காவி யுடை
வேட மாகின ரோடி வாடுவ ரறியாயோ

வீடு தேடி மன தோடு தேற நிலை
வேக மாய்கன மாகு மோர்சிவ குருநாதா

கோதி லாத முக மான தோழி யுடன்
கோதி டாகிளி கூவு வாய்மொழி குறமாது

கோல மாறு முக மாறி வேறு மொரு
கோலு மோர்கிழ மாகி தோளணை மணவாளா

தீது வாது புரி சூர னுகு கொடு
தீய னேடம ராடி வோற திருமேனி

சீறு நாக பட மீது வோர்ச யன
தேக மோதிரு மாலு மானவன் மருகோனே

சூது பேசு சபை நாடி யானு மழ
சூர ஞுகின நாக நாடக கதிர்காமர்

சோலை தேன்சொ ரிய வான மாரி பொழி
சோள மாபுர மீது வாழ்வுறு பெருமானே

அரிமளம்.

தனன தத்த தத்த னத்த தனன தத்த தத்த னத்த
தனன தத்த தத்த னத்த தனதாண

வலிய விக்கி பக்தி யற்ற பொருள்ப டைத்த ரைக்குறித்து
வாக விப்ப டித்து நிற்ப ரறியாயோ

வளரு சித்த வித்தை யிற்கு லவிட நட்பு பெற்று விர்த்தி
வழிய சத்த மைத்த சுத்த குருநாதா

கலன டுக்கி செப்பு வொப்பு தனமி டத்து கச்சி றுக்க
கதறி டப்பு னத்து தத்தை குறமாது

கடுகி வெட்கி சொக்கி நட்பு பெறநி னைத்து சக்கி முக்கி
கதைப டித்தி தழ்க்க டித்த மணவாளா

குலம ரக்க னிட்ட துட்ட கொடுமை முற்றொ ழிக்க பத்து
குலைத லைப்பி ளக்க சுட்ட திருமேனி

குறைத விர்த்து சற்றி ளைப்பு தணியி ரைச்ச லக்க டற்குள்
குலவி டப்ப டத்த டுத்தன் மருகோனே

அலறி யச்ச பைப்ப டிக்க கொடுமை தொட்ட ரொப்பு வைக்க
அடிந டித்து சித்து ணர்த்து கதிர்காமர்

அழக மைக்க தக்க பக்த ரினமி னிக்க வொற்று கற்பு
அரிம ளத்தி லுற்ற நித்ய பெருமானே

மானகரி.

தான தன தான தான தன தான தான தன தான தனதான

கோறிபணி யாகி வேத கவி பாட
கோப கன வான்க எறியாயோ

கோல தவ மோடு நீத மன தேறி
கூடு சிவ ரூப குருநாதா

மீறி தன மாடு பாலு மொழி யாகு
மேரு கிரி போல குறமாது

மீள வன வேட னாகியொரு மானே
மேவி விளையாடு மணவாளா

சீறி குல சூர மூல படை வீழ
சேதமிடு கோல திருமேனி

சீத முக தேவி யோடுபட மீது
சேர துயில் வோனின் மருகோனே

மாறி யவ தூறு பேசி சபை மீது
மாறி நட நாக கதிர்காமா

மாரி பொழி சோலை யேரி கயல் பாயு
மான கரி மேவு பெருமானே

நேமுத்துப்பட்டி.

தானத்த தத்த தந்த தானத்த தத்த தந்த
தானத்த தத்த தந்த தனதான

ஓரிட்ட ரைப்ப ணிந்து கூறிக்க விப்பு கழ்ந்து
ஓடிக்க ளித்த நெஞ்ச மறியாயோ

ஓமப்ப டித்தொ டர்ந்து சோரத்த னித்து ருண்டு
ஓர்மைப்ப தத்த மர்ந்த குருநாதா

வாரிட்ட செப்பு கொங்கை யாளைப்பு னத்து ளன்று
வாயிட்டு கத்து கின்ற குறமாது

வாடித்த வித்து வந்து தோழிச்சி ரிக்க நின்று
வாதிட்ட ணைத்த சொந்த மணவாளா

பாரெட்டு சுற்று லங்கை யோனுற்ற வஞ்ச நெஞ்சில்
பாணத்தை விட்டு கொன்ற திருமேனி

பாலைப்ப சிக்க ருந்தி சீறுப்ப டத்த மர்ந்து
பாயிற்ப டுத்த வன்றன் மருகோனே

நீரிட்ட நெற்றி வஞ்ச லோபிப்பொ டிக்க ணம்ப
நேரிட்ட முற்சு யம்பு கதிர்காமா

நீடித்த சத்து மன்று போலொத்து சித்த ணிந்து
நேமுத்து பட்டி நின்ற பெருமானே

சக்கந்தி

தத்தந் தத்தன தானன தானன
தத்தந் தத்தன தானன தானன
தத்தந் தத்தன தானன தானன தனனன

இச்சந் தக்கவி மாமாரி யோவென
கற்கண் டுப்பழ பாலாகு மேமொழி
இக்கந் தப்புகழ் சீமானும் யாருள ரறியாயோ

இப்பந் தக்கொடு மாமாய்கை யாமன
நட்பன் புற்றிடி லேகாணு மோர்நிலை
யிற்சென் றுத்துதி வாழ்வாகு மே சிவ குருநாதா

கச்சுஞ் செப்பென வேபாயு மாரிரு
நச்சங் கொப்பிடு சேலாகு மேவிழி
கட்டுஞ் சிற்றிடை தானுடு பூமுக குறமாது

கத்துஞ் சொற்குயில் மேலாசை யேபுக
வெட்கம் விட்டிரு காலோய வேநடை
கட்டின் புற்றிடு தோளோடு தோளணை மணவாளா

அச்சம் பற்பல தேவாதி தேவரை
நெக்குந் துற்குண சூராதி சூருயி
ரச்சுஞ் சுட்டெறி போராடு நாரண திருமேனி

அச்சம் விட்டவ ராகாய வீதியி
லுற்றுங் கொட்டிடு பூமாரி யேசொரி
அக்கஞ் சற்றய ராழாழி வாழ்பவன் மருகோனே

சச்சுங் கெட்டவ ரூடாடி வாதிட
மெச்சும் பட்டண மீரேழு பாரென
சர்ப்பஞ் சித்துரு வாகான தேசிக கதிர்காமா

சட்டஞ் சொற்சுவை மேதாவி யாமிவ
ரொத்துஞ் சத்திய சீரோடு கூடிட
சக்கந் திப்பதி வாழ்வாகி யேவளர் பெருமானே

காரைக்குடி.

தானத் தனதன தானன் தானன தனதான

சீரைப் பெறநினை வோடாடி யோர்தன
வானுக் கிதுகவி வாயாற வேசொல
சீரிப் பொழிகிற பேயாடி வாய்மொழி அறியாயோ

சீதக் குளிர்மன மூடாடி யோர்தவ
நீதப் படிநிலை யூடாடி வாழ்வுற
தீயத் தருகிற மாமாய்கை யேதவிர் குருநாதா

வாரைக் கிழிநிமிர் சேலாகு மேவிழி
கோணச் சிறுமதி போலாகு மேநுதல்
வாயிற் கிளிமொழி ஆலோல மோகுரல் குறமாது

வாடிக் குளறிட வீழாது காமனும்
மோகத் தலைகிரி யாலோடி வேடுரு
வாகிப் பலகளி வாயாடி தோளணை மணவாளா

போரைத் தழுவிடு சூராதி சூரனும்
மீறித் திருடிய தேரோடு பூவையை
போலிப் பயல்குலம் வேரோடு தீயிடு திருமேனி

போகத் திருமகள் தோளோடு சீரிடு
நாகப் படமிடை மீதேறி வான்முகில்
போலக் கருநிற மேமாலை மேனியன் மருகோனே

காரைக் குலவிய தேனுடு சோலைக
ளேறச் சபையினி லேவாது கூறினர்
காணப் பொதுவினி லேயாடி கூடிய கதிர்காமா

காதற் பொருளென வாழாது வாழ்பவர்
கூடிச் சிவசிவ ராமாவெ னேதிடு
காரைக் குடிவளர் தேவாதி யாய்வரு பெருமானே

பாகனேரி.

தானத்தான தத்த தான தான தத்த தான தான தத்த தனதான

ஓடி யாடி சுற்றி காவி யாடை கட்டி
யோகி டாத பக்தி யறியாயோ

ஓர்மை யேத வத்தி லாகு மாம னத்தி
னேமி லேசெ னித்த குருநாதா

சேடி யோடு கத்தி வாழு மானி னத்து
சீத மாமு கத்தி குறமாது

சீறி மான்வி ரட்டி வாது மேல்ம யக்கி
சோ வேந டித்த மணவாளா

வாடி சூர துட்ட னோடு போர்வி ளைக்க
வாலி மார்ப றுத்த திருமேனி

வான மூட விட்டு மேழு சாக ரத்து
வாழு மாலு மொப்பு மருகோனே

பாடி நூலு ரைக்க தீய ரோநெ ருக்க
பாத மேன டித்த கதிர்காமா

பாரி லேவ ளப்ப சோலை தேனி றைத்த
பாக னேரி யுற்ற பெருமானே

சொரணநாதபுரம்.

தனன தான தன — தனன தான தன
தனன தான தன — தன தான

அகில போதரென குதிரை சேனையொடு
அணிவர் சூழவர லறியாயோ

அறிவி லூடுபெறு மனமு மாய்கை வெளி
அறிய சிவநிலை குருநாதா

முகில தாகுகுழ லழகு வோசை குயில்
முகிய சோம முக குறமாது

முகையி லாசைகொள கிழவ னாகிவர
முடிவு தோளிலணை மணவாளா

பகைவ னாகுகொடு குலமு மேயொழிய
படையை சாடி யெதிர் திருமேனி

பகலி லாடுகட லரவ மேவுபட
பரணை மேல்துயில்வன் மருகோனே

சொருசு பேசிசபை குளறு சூதர்மன
துணைவ னுனநட கதிர்காமா

சுகத யாளமழை பொழிய சோலைவளர்
சொரண நாதபுர பெருமானே

குளிபிறை.

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன தனதானு

உலகிலுள பல புருட ரவரவரு மவரறிவை
உளறிவில பெறுவதிது அறியாயோ

உடலினுறு மழகுநிலை பொதுவினட மிடுதுரையி
னுளவுபொரு ளதிபசிவ குருநாகா

கலகமிடு மொருமுனிவ னுரைபெரிது யெனவுருகி
கடுகிவழி நடைவளர புனமீது

கலகலென வொலிபொலிய குளிருமுக குறமகளை
கருணையுள மொடுபுணரு மணவாளா

பலகொடிய தொழிலகல கொடுமைபுரி குலமொழிய
படைமடிய கணைபொழியு திருமேனி

பகலவனு மிளமதியு மொருகுடையி லரசுபுரி
பவளயித ழாவணையன் மருகோனே

குலமகனு மனமுருகி பத்றியழ நொடியிலொரு
குணமருவி யெதிரிலுறு கதிர்காமா

குலவிதிரு வநுதினமு மனதுமகி ழுடனுலவ
குளிபிறையில் நடனமிடு பெருமானே

அமராவதிபுதூர்.

தனன தனத்ன தனன தனதன—தனதான
தனன தனதன

குமரா யெனகவி யோதிட காதில ரறியாயோ

குணமே பெறமன மோர்நிலை யேசிவ குருநாதா

திமிரா கிடுதன வாரணி பூமுக குறமாது

திகிலா கிடவே போரொடு தோளணை மணவாளா

நமனா ரணனென வோதினை யேதென திருமேனி

நவிலா முனமொரு துணிநி லாடினன் மருகோனே

அமரா டிடுசபை யார்மன மேதணி கதிர்காமா

அமரா வதிபுது வூர்பதி மேவிய பெருமானே

கடியாபட்டி.

தனன தத்தன தனன தத்தன தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன தனன தத்தன தனதான

அருளோ தித்தவ முறவா டிப்பலர்
தெருவீ தித்திரி கிறபே ரெத்தனை
அறியா திப்புவி னிலைபே தித்தது அறியாயோ

அழகா மித்திரு மனமே விற்பன
னிறைசோ தித்தெழு கிறதா லுற்பவம்
அருவா கித்திரு வருளா மற்புத குருநாதா

விருதா விற்பல வனியா யக்கொடு
கிளிகோ தத்தினை குரலோ சைக்கிசை
வெளியா கக்களை புனமீ துற்றிடு குறமாது

விரைவா கக்குறி மிகுமோ கூத்துட
னெருமா னெக்கொடு யெனகே லித்துறை
விளையா டிச்சுனை விழவே டிச்சியின் மணவாளா

பெருவா ரித்தவ் நிலையோ னக்கொடு
வுடலா வித்தலை குலவே ரற்றிட
பிடிமு லக்கணை விடவே கக்கர திருமேனி

பெருநா கப்பட மிடையே நற்றுபி
லுறைவா கித்திரை கடலே றிப்பொது
பிடிவா தத்துரை பெருமா னுக்கொரு மருகோனே

கருமே கத்தமி ழெனபோ தித்ததி
சயமா கிப்பல ரிதுவே யற்புத
கலைவா ணிச்சபை நடமா டிப்புகழ் கதிர்காமா

கவிவா ணர்க்கொரு பொருளா கித்தவ
நிலைபோ கத்தொழு கிறபா தப்பத
கடியா பட்டியி லுறுதே வத்திரு பெருமானே

காஞடுகாத்தான்.

தானன தந்த தானன தந்த
தானன தந்த தனதான

வானுடு கந்த பாமாலை யின்ப
வாழாது வாழ்த்த லறியாயோ

வாதாடு நெஞ்சு னுடாடு கின்ற
வாலாய பூத்த குருநாதா

தேனுடு கொங்கை தானுடி தங்கு
தேவாதி கூற்று குறமாது

தீர்த்த சங்கை போர்ரடி மங்கி
தேனுளே சூட்டு மணிவாளா

கோனகு லங்கை சூராதி வம்ப
ரோடாழி வீழ்த்தி திருமேனி

கோலால தண்ட மாலாய்ம ணந்த
கோபால மூர்த்தி மருகோனே

கானடு பொங்கி நானேதி யங்க
காலாடி பார்த்த கதிர்காமா

காமாதி பங்கி லேவாழு கின்ற
கானடு காத்த பெருமானே

புதுவயல்.

தன்னதத் தனனதத் தனனதத் தனனதத் தனதான

அழகுளப் பொதுநிலத் திலகுபற் பலகுலத்
தவருசெப் பிடலுமொத் ததிசயித் துணருவர்க்
கறிவைவிற் றிடலையெக் கிடமனத் தெதிரிபித் தறியாயோ

அணிகுலத் திருவுருப் பெருநிலைச் சிவபதப்
படிவிளக் கருநிலைக் கலைபறப் பிடலிதற்
கருளெனப் பதவொளிப் படிநடத் திருமனக் குருநாதா

குழலினட் கருநிறச் சிறுமியர்ப் புனமதிற்
றிரியுபுட் கிளிகளைக் கவணெறிக்
குயிலுமொத் திடுகுரற் பறவையப் புறமுறுக் குறமாது

குளறிபித் தெழவுமப் பெருவனத் தொருநரைக்
கிழவுருக் குடுகுடுப் படிநடப் பொருதடிக்
குணகரத் திடைபிடித் துளரிடச் சுகமணைக் குமரோனே

சுழலுதுட் டருமெதிர்த் திடரைப் படையினர்ப்
பொருநிமற் கொடியினிற் றலையுபத் துடனறுத்
தொழுவதற் கரியவிற் புயமணைத் தொடுகணைத் திருமேனி

சுகிர்தநட் பெழிலெனத் திரைகடற் பவனியிச்
செகமுமெச் சுடரெனப் படவணைத் துயிலுறச்
சுகமணைத் திருமகட் டனதுடற்பொலிபவர்க்கொருவாழ்வே

புழுகெனச் சபையினர்ப் பொதுமறைக் கவிதையைப்
பலருகெக் கலியுகொட் டிடவுறச் சமயமப்
புகழுதைத் தெளிவுறத் திருநடத் திலகியக் கதிர்காமா

புனிதமுச் சுடரெனச் சிலைவளர்த் தொழுகிடச்
சரியெனக் கருணையுற் பவமதிற் பரனெனப்
புதுவயற் கினியநற் பதியெனக் குலமகிழ்ப் பெருமானே

பள்ளத்தூர்.

தையத் தானன் தானன தந்தன தனதான

உள்ளத் தேறுத லூறிவி ளைந்திடு
நல்லப் பாமன மாகிநி றைந்ததில்
உள்ளத் தேவனை யோதிவ ணங்கில ரறியாயோ

உள்ளக் கோவிலி லேகுடி கொண்டமை
தெள்ளத் தேனெழு காகும னந்தனில்
உள்ளப் பூபா னுகிவி ளங்கிடு குருநாதா

வள்ளிப் போல்கொடி யாகிவ ளைந்திடு
துள்ளுத் தோளிடை மாருநி மிர்ந்தொரு
வள்ளிப் பேரொடு கூவிதி ரிந்திடு குறமாது

வள்ளற் பூபதி வேடுரு கொண்டமை
கள்ளக் கோல்கர மோர்கிழ வன்றிரு
வள்ளித் தோளொடு தோளணை மங்கள மணவாளா

வெள்ளிச் சூழ்கயி லாயம சைந்திட
மெள்ளத் தோளினி லேவிசு மந்திட
வெள்ளைப் பூபதி யோன்விர லும்பதி திருமேனி

வெள்ளைக் காலனை யோருதை தந்திட
அள்ளிப் பூமுடி மீதமை கங்கையன்
வெள்ளைக் காளையி லேறிந டந்தவன் மகிழ்வோனே

பள்ளிப் பால்கவி யோதிவ ருந்திட
கொள்ளைப் பேசின தீயவர் முன்னொரு
பள்ளக் கால்மறை வாகந டம்புரி கதிர்காமா

பள்ளச் சோலைக ளேவள முங்கமிழ்
தெள்ளிச் சீர்நிறை மாமழை யும்பொழி
பள்ளத் தூர்பதி மேவிவி ளங்கிடு பெருமானே

மிதிலைப்பட்டி.

தனதத் தத்தன தன தன தன தன தனதான

இதுகட் டுப்படு மெனசில ருளருவ
ரவருக் கொப்புவ ரவரொரு வழியின
ரிடருற் றுப்பெறு கிறதெது தெளிவுட னறியாயோ

இனமொத் துப்பர வசமுள மனவெளி
வுடனைப் பிட்டுள நினைவமை தியிலுற
இடமொப் பிப்பொது நடமிடு சிவதுரை குருநாதா

மதுமற் றுக்குடி வனமதி லலைகிற
குறவர்க் குற்றிடு மிளநகை யொளிமுக
மதிவெட் கிப்புற சிறுவட லதுபெறு குறமாது

மருளப் பற்பல சிறுகளி புரிவதி
லுளறித் தத்திமி திமிதிமி திமியென
மருவிப் பக்குவ மனதொடு புயமணை மணவாளா

விதுகற் புப்பழி யிடுமொரு கொடியவ
னுடல்பட் டக்குல மொருவரு மிலையென
விடுபட் டக்கணை மெழுகிட களைதணி திருமேனி

வெருசத் தத்திரை யெழுகிற கடலினி
லொருபக் கப்பதி யெனமன நிலையுற
விடசர்ப் பப்பட மதனிடை துயிலுவன் மருகோனே

மெதுவுற் றச்சபை நகைபுரி கிறவரு
மனமொத் திட்டிது சரிசரி சரியென
மிளிரப் பற்றுட னடமிடு திருவுரு கதிர்காமா

மிகநட் புக்குல வளமமை மழைபெரு
கிடகுட் டைக்குள நிறைஜல மொழிகிடு
மிதிலைப் பட்டியி னிலைபெறு மனமகிழ் பெருமானே

கோட்டையூர்.

தாத்தன தந்தன தந்தனந் தந்தன — தனதான

வாக்குளோ ரும்பல ருங்குணங் குன்றின
ரேய்க்கிரு ரென்கிற தன்மையுங் கண்டிலர்
வாட்டமொ டுஞ்சில ரின்மனஞ் சங்கட மறியாயோ

வாச்சிபோ லம்பும னங்கொடுந் தன்னிட
மாக்குவா ரின்னக மும்புறஞ் சுண்டிட
வாழ்த்தி பாடும்பத மொன்றுறுஞ் செம்மன குருநாதா

ஊக்கமோ டுங்குரு வின்னினந் தின்பதை
போக்குவா ளுங்குற சின்னிளங் கன்னியள்
ஓட்டிபா டுங்குர லின்புனங் கொண்டமை குறமாது

ஓட்டமா கும்புன மங்குடன் சென்றிட
யேக்கமா குஞ்சம யம்மனஞ் சிந்துழ
லூட்டுமா தந்திட மென்றுதின் றின்புறு மணவாளா

தீய்க்குளே நின்றுபெ ருந்தவம் பண்ணிட
பார்க்கவே லங்கைய னும்பலங் கொண்டொரு
சேர்க்கையா லுஞ்சிர முங்களங் கண்டிடு திருமேனி

தேக்கிமா பொங்கெழு கின்றதுஞ் செங்கட
ஞெக்கிசீ றும்பட மும்பெறும் பஞ்சணை
தீட்டிவா ழுங்கரு செந்நிறங் கொண்டவன்மருகோனே

கோக்குமா கிம்மிது வென்றதுந் துன்மன
வாக்குபே சுஞ்சில ரின்மனந் தண்பெற
கூத்துபோ லும்பெரு யின்புடன் வந்துறு கதிர்காமா

கூட்டுகூ டும்பத மின்றிவன் சஞ்சல
மோட்டிவா ழுந்தவ மும்பதம் பொங்கிட
கோட்டையூ ரம்பதி யென்றும ணங்கிடு பெருமானே

சொக்கலிங்கம் புத்தூர்.

தத்த தந்தந் தத்தா தனதன—தனதாண

அப்ப னன்பும் பெற்று ரிலைபுவி அறியாயோ
அத்து ளம்பண் புற்று டிடுமன குருநாதா
செப்பி ளஞ்சம் பத்தா ளிருதன குறமாது
செட்டி யுங்கண் டிட்டா னெனவணை மணவாளா
தப்பி தந்துன் பத்தார் குலமழி திருமேனி
தக்க துஞ்சங் குற்றுன் மனமகிழ் மருகோனே
சொப்ப னங்கண் டுற்றுர் சபைநட கதிர்காமா
சொக்க லிங்கம் புத்தூர் திருவளர் பெருமானே

சொக்கநாதபுரம்.

தத்தன தனன தத்தன தனன
தத்த தானன தத்த தானன—தனதான

பட்டுபோ லறிவை விற்றுவீ திதிரி
பத்தி யார்பலர் முக்தி காண்கில ரறியாயோ

பற்றுசீ வநிலே தத்திநீ யகரை
பக்க மாகின னப்ப னுமிவன் குருநாதா

சிட்டியா குகுர விட்டுகூ வியிரு
செப்புமா தன மொக்கு வாழ்புன குறமாது

செட்டிபோ லவளை விற்றுவா டமன
சிக்கி மாமய லுற்று தோளணை மணவாளா

துட்டசூ ரமுடி பத்துமூ லபடை
துக்க சாகர முக்கு மோர்கணை திருமேனி

தொட்டுசீ றுதிரை சத்தமா குகடல்
சொக்கு நீலனி றத்த னார்மகிழ் மருகோனே

சொட்டுபே சுசபை கத்திநா னுமழ
தொட்ட நாளது சர்ப்ப மாய்வரு கதிர்காமா

சொத்துளோர் களுள மொப்பி தேன்சொரிபு
சொக்க னுபுர முற்று வாழ்வுறு பெருமானே

பனையப்பட்டி

தனதத் தத்தன தத்தன தத்தன—தனதான

அருமைச் சொற்குண முற்றவ ரிப்புவி
சுருதித் தற்பர வத்துவி னற்புத
மழகுப் பொற்கனி பற்பல புத்தக மறியாயோ

Q26:417
N33

அானச் சுத்தம னத்தினி னுற்பவ
முளமப் பத்திவி ளக்கிடு மத்தகி
அசைவற் றெற்று டிப்பவ னுத்தம குருநாதா

ஒருமைப் பொட்டுப தித்தமு கத்தின
ளிளமைச் செப்புகி ரித்தத னத்தினி
லொடியப் பெற்றுவ ளைப்புறு சிற்றிடை குறமாது

ஒழுகப் புத்திக ளைத்துவ ரப்புன
சிறுமிச் சற்றும தித்துப யப்பட
வுடனெப் புற்றுவ ருத்திம ணப்புறு மணவாளா

பெருசுட் டிச்சுர ரக்குல மத்தனை
நொடியிற் பட்டுவி ழத்தலை வெட்டிட
பிடிதொட் டொக்கவ ளைத்துவி டக்கணை திருமேனி

பிரமித் துற்றக ளைப்புத ணித்திட
மனதுற் றிப்புவி சத்தச முத்திர
பெறுமச் சர்ப்பப டத்துப டுத்தவன் மருகோனே

பருகப் பற்றும னத்துய ருற்றிடு
பொழுதிற் பற்பல துட்டரு மப்பதி
பணியச் சற்றுவி ளக்கிமி ரட்டிய கதிர்காமா

பலருக் கெட்டறி புத்திம யக்கிடு
நிலைசுற் றத்தவ ரொப்பிக ளிப்புற
பனையப் பட்டியி லுற்றிடு தத்துவ பெருமானே

கண்டவராயன்பட்டி.

தந்தன தானன தத்தன தந்தன—தனதான

அண்டச ராசர கற்பனை யும்புவி
யின்புவி னோதவ ழக்குவி ரிந்திடு
மந்தமு மாதிவ ழக்குபு ரிந்திட லறியாயோ

அன்புகு பீரென பற்றும னம்பிடி
நம்பிச தாசிவ சத்துப தந்தொடு
அங்குப ளீரென வந்துவி ளங்கிடு குருநாதர்

உண்டுச கோதர நட்பும லிந்தவ
ளன்றுபி தாதினை முற்றுமு திர்ந்திட
உண்டுபு ருகிளி கொத்திடு மென்றுறை குறமாது

உண்பர ணேறிகை கற்கவ ணும்மெறி
யுங்குர லோகுயி லொற்றும லிந்தவள்
உன்பத மேகெதி சொக்கிம ணந்திடு மணவாளா

கொண்டம கோதர தப்பிலி மந்திரி
வம்பன னேகத வத்தின ரின்பழி
கொண்டுச தாதிரி துட்டயி லங்கையன் முடிவிழ

கொந்திடு கூளிக ளிப்புமு ழுங்கவு
தின்றுபி சாசிக ளப்பிண முங்குதி
கொண்டுவு டாடவி டக்கனை கொன்றவன் மருகோனே

கண்டவ ரோமறை புத்தக மென்னென
சிந்தைய தீதமு முற்றுவ ருந்திட
கண்முன மேனட சர்ப்பப டந்திரு கதிர்காமா

கம்பொடு சோளமு கெற்பயி ருங்கம
ழும்பெற வேமழை யைச்சொரி யுங்கன
கண்டவ ராயன் பட்டிம ணந்திடு பெருமானே

நச்சாந்துபட்டி.

தத்தா தத்தத்த தந்தன தத்தன—தனதான

இக்கா லப்பற்று ளென்றுக ளிப்பெனு
பொய்ப்போ கத்துற்று வந்தவ ருக்கினி
இட்டா ரைத்திட்டி கொண்டுந டப்புரை அடியாயோ

இப்பா லுக்கற்ற மன்றுநி லேத்திட
அப்பா லுக்கப்பு றஞ்சிவ தத்துவம்
இத்தே கத்துக்கு ளெங்கும ணப்புறு குருநாதா

மிக்கா கக்கத்தி செங்கர கற்கவ
ணுக்கே கொக்குப்ப றந்துவி ரட்டிட
மெத்தா திக்கற்பு கொண்டமு கத்தினள் குறமாது

மெட்டோ டுப்பற்பு யங்கமி னுக்கிந
டப்பா கித்திக்கி மங்கிவி ழித்தொரு
மெட்டா கக்குட்டி யின்மன முற்றிடு மணவாளா

பக்கா துற்புத்தி லங்கைய ரக்கனை
முக்கா முக்கிட்ட வன்றலை பத்தினை
பப்பா பப்பப்ப யென்றுவி ழுக்கணை விடுவோனே

பத்தே பொட்டுற்ற வங்கமு ளைத்தவ
னுக்கோ ரொப்பற்ற யின்புநி றைத்திடு
பற்றோ டுச்சத்த செங்கட லுற்றவன் மருகோனே

நக்கா ருக்கப்ப யம்பெற பொட்டென
முக்கோ ணச்சக்க ரந்தெரு விற்பட
நட்பா கிப்பொற்ப தந்தரு சித்தமை கதிர்காமா

நட்பா னுக்குற்ற சங்கட முற்பவ
முற்றா லப்பித்த னங்கும ழைப்பெற
நச்சாங் துப்பட்டி யென்று மணப்புறு பெருமானே

அலவாக்கோட்டை.

தன்ன தாத்தன தனதன தனதன—தனதான

தொழுதா தேற்றுவ ரவரொரு வகையினர்
அலைவா ராற்றலு மிலைபல கபடினர்
துதியே மாற்றுவ தறிவின ரறிவில ரறியாயோ

துணைவே தாக்கம நிலையொரு படியுள
மனதோ டோட்டுள னடமிடு கிறவழி
சுகபோ தாக்கினி தெளிவுறு மதிலமை குருநாதா

குழலோ காட்டிரு ளிளநகை மதிமுக
விழியோ கூற்றிரு கனதன பவளிதழ்
குரலோ கூக்குர லிடுகிற குயிலினள் குறமாது

குணமோ ரேக்கமு மனமுரு கிடுமெதி
லனலோ தீய்க்கிரை களையொடு மயலெழ
குறியோ தாக்கிட அவளிரு புயமணை மணவாளா

மொழியோ வாய்ப்பல தருமிடி பொடியென
விழியோ தீப்பொறி கனலெறி யொருபது
முடியோ வீழ்த்திட வொருகணை விடுகிற திருமேனி

முனிநா தாக்களு மனுதின மனமகி
ழினிவோ டேக்கமு மதுதணி யமைவுற
முகிலே ணேக்குறு திரைகட லுறுபவன் மருகோனே

அழவே கூட்டுற வளர்சபை யதிரிட
கதியோர் போக்கது யில்லையென திகிலுற
அடியா ருக்கமு மதிசய நடமிடு கதிர்காமா

அழகாய் போற்றிடு கனதன வைசிய
ருறவாய் காட்டிடு வளமமை மழைபொழி
அலவா கோட்டையி லுறுபெரு சிவதுரை பெருமானே

கண்டனூர்.

தந்தன தத்தன தந்தன தந்தன—தனதான

வெந்தசோ றுத்துணி தந்தது வெங்கனம்
நம்பிமோ சத்தொழி லெங்கும லிந்தது
வெம்பியோ டித்திரி கின்றவ ரும்பலர் அறியாயோ

வென்றகோ லக்குறி நெஞ்சினி லுங்குல
மொன்றுபோ லப்பொது யென்றுநி னைந்திட
விந்தையா கக்கன மும்மன மென்றுரு குருநாதா

சொந்தமா கப்புன மெங்கும ணங்கம
ழுஞ்சதா கற்கவ னுங்கா மும்மெறி
துங்கரூ பத்தின ளின்முக மின்னொளி குறமாது

சொன்னபொ தக்கண மங்கும னம்படு
தன்னுரு பத்தினி னின்றுவ னந்திரி
தொந்தவே டத்தொரு வந்தும ணம்புரி மணவாளா

வந்தசூ ரப்படை பொங்கிமு னிந்திட
நின்றுகோ பப்பொறி செந்தண லின்கணே
வம்புபே சத்தலை மங்கிவி ழுந்தபின் திருமேனி

வண்டுபா டுக்குயி லின்றெனி பொன்னிற
மிஞ்சுமோ கக்குறி கொண்டுக லங்கிய
வம்பிசூ ரப்பெரு கொங்கைய றிந்தவன் மருகோனே

கந்தநா தச்சபை யின்முன மன்றுப
ணிந்திடா தப்பல ருந்தெளி வென்றுரை
கண்டுபா லித்தரு ளுங்குண மங்கள கதிர்காமா

கம்புசோ ளப்பயி ரும்மழை பொங்கரு
ளின்புவா ரிக்கட லின்றுள முங்கமழ்
கண்டனூ ரப்பதி யென்றுவி ளங்கிடு பெருமானே

குருவிக்கொண்டான்பட்டி.

தனதத் தந்தான தத்தனத் தத்தன தனதான

விண்பற் றுந்தேக மிப்பிறப் புற்றெழு
மெனகற் குங்கேள்வி சொற்பொருப் பற்றதை
விடுபற் றும்பாச மிக்குடற் குற்றது அறியாயோ

விளைவுற் றன்பூட சத்தியப் பக்தியி
 லொருசித் தர்தோ னுமப்பெருச் சித்தினை
 விழிபெற் றுங்கா னுமத்திருக் கற்புரு குருநாதா

திளைமுற் றுங்கால முற்றிடப் பெற்றவள்
 கவனுக் கும்மேவு கொக்கினப் பட்சியை
 திடசத் தம்போடு மக்கொடிச் சிற்றிடை குறமாது

திரைசுற் றுங்கோள னற்கிளைப் புற்றவன்
 திருநற் சம்பாஷணைச்செவி புக்கிட
 இடமுற் றும்போக முட்பெருக் குற்றிடு மணவாளா

தனைசுற் றுந்தீவி னப்பதிக் கொற்றவ
 னுடனுட் பொரங்காய பொற்சிரப் பத்தரை
 தவமுற் றுஞ்சாய விட்டதக் கைக்கணை திருமேனி

தனைநித் தங்காண நிற்பருக் குற்பவ
 திருநட் புந்தேவி கற்பினிற் குற்றிடு
 தனமுற் றும்பால்ச முத்திரத் துற்றவன் மருகோனே

குனிவுற் றங்கோத யிப்பொதுப் புத்தக
 மினமொற் றங்கேந டித்திடச் சத்துரு
 குலவுற் றுஞ்சீல பொற்பதச் சித்தமை கதிர்காமா

குணமுற் றும்பூமி நெற்பெருக் குற்றிட
 வளமுற் றுங்கேணி யிற்சலப் பொற்பமை
 குருவிக் கொண்டான பட்டியைத் தொட்டுறை பெருமானே

கல்லல்.

தையத் தனதன தனதான

உள்ளத் தெளிவில ரறியாயோ
 உள்ளப் பொதுசிவ குருநாதா
வள்ளிக் கொடியிடை குறமாது
 வல்லக் கிழவுரு மணவாளா

பள்ளிக் கடலுறு திருமேனி
பல்லக் கதிலமை மருகோனே
கள்ளச் சபைநட கதிர்காமா
கல்லற் பதிவளர் பெருமானே

விரையாச்சிலை.

தனனா தனனா தத்தன தத்தன தனதானா

அழையா ரிடமே சொற்பொரு ளொப்பவு
மனமோ விடையா திப்படி யுற்பவ
மழகா முடலே செத்துபு தைப்பது அறியாயோ

அறிவா கிடுமே வந்துநி லைப்பொது
பொருளா மிதுவே சத்துத னித்தது
அருளா முளமே கற்புக லப்பது குருநாதா

குழலோ கருமே கத்துநி கர்த்தது
முகமோ மதியே வெட்கிந டப்பது
குரலோ குயிலோ கத்திப ணிப்புறு குறமாது

குணநா ரதமர் சொற்பொழி யச்செவி
மிருமோ கமதா குப்புன முற்றொரு
குறிவே டனுமா கிப்புண ருற்றிடு மணவாளா

பழமா கிடுமோ நித்திய தத்துவ
மெனவா டிடுதே வர்க்கொரு சத்திய
பரமா பதியே நித்திரை யைத்தரு திருமேனி

பலநா ளமரே றுற்றுப லத்தலை
விழபா ரினிலே சற்றுப டுத்தொரு
படுமா விடநா கத்துயி லுற்றவன் மருகோனே

விழலா கிடலோ பற்றிது திப்பது
யெனவா டிடவே சற்றுக ளைத்திட
விரைவோ டினிதா கச்சபை யுற்றிடு கதிர்காமா

வெளியா கிடவே சுற்றிம னத்தினி
ஒருவா றுளமே னட்புபி டித்துள
விரையா சிலையோ டொப்பிம ணப்புறு பெருமானே

கண்டரமாணிக்கம்.

தந்தன தாதத்த தந்தன தானதத்
தந்தன தாதத்த தனதான

எண்ணறி தானத்தி லுன்னத பூமிவைப்
பெண்ணப ழாதொப்பி தறியாயோ

இன்னமு தாகப்பு கும்மன கோவிலுக்
கெண்ணுப ராவுற்ப குருநாதா

கண்ணிரு சேலொப்பு புன்னகை யாமுகக்
கன்னக ணுடிநற் குறமாது

கண்டிட மோகித்து றும்புன மேவிடக்
கன்னிகை யோடொப்பு மணவாளா

பண்ணிய வேதச்சு ழின்னில சாமமப்
பங்குள னேடுத்த திருமேனி

பங்கினி லேதிக்கு மின்னொளி நாகமப்
பஞ்சணை மீதுற்ற மருகோனே

கண்ணிய மாகிக்கொ ளென்றுள வாதனைக்
கண்டிட நேருறக் கதிர்காமா

கன்னலு சூழொப்ப பொன்னக ராமெனக்
கண்டர மாணிக்க பெருமானே

நாச்சியாபுரம்.

தாத்த தானன தானன தந்தன—தனதான

பூத்து காய்பழ மாகிடு மென்றொரு
நாத்து தானிட வோசல முங்குளிர்
பூட்டு சாவியி லேதிற வென்பது — அறியாயோ

பூச்சு வாசம தாகிடு சந்தன
மாச்சு மாறிடு மோரிட மொன்றுள
பூத்து காய்கனி யோகுலை தொங்கிடு — குருநாதா

கூத்து பாடிடு வாரிள மங்கையு
மாத்து காணறி யாமுக புன்னகை
கூட்ட மாய்விளை யாடிடு மம்புன — குறமாது

கூக்கு கூகுகு கூகுகு கொம்பொடு
மாற்றி ரூபம தாகித ளர்ந்தொரு
கூத்து போலபி மானம ணம்பெறு — மணவாளா

காத்து மோர்புற னீருக லங்கிட
வாட்டு தீயவ னுமவனி ன்புய
காக்கை கூளிக ளோகுதி கொண்டிட — திருமேனி

காப்பு நீயென யானைவ ருந்திட
யேக்க மோதணி வாகந டந்துயிர்
காத்த மாலுள மீதுநி றைந்திடு — மருகோனே

நாத்த மேனிறை வாயுளர் கின்றவ
ரோட்ட மாகிட மேனிதி றந்தவ
னூட்ட மாமன மேமகிழ் தந்திடு — கதிர்காமா

நாட்க ளோபல வேயிலை யுன்னரு
ளேக்க மோமிகு வாகிவ ளர்ந்திரு
நாச்சி யாபுர மேவிவி ளங்கிடு — பெருமானே

அழகாபுரி. (கோட்டையூர்)

தனை தனை தனை தனை
தனை தனை—தனதானை

ஒருமா கனவா னிடமே கவிபா
டிடிலோ வுதவா னறியாயோ

உளமோ டுறவா கிடுவோ ரினமோ
ஒளியே நிலையே குருநாதா

இருளா கிடுகார் குழலே யுடையா
ளிடையோ கொடியே குறமாது

இளாகா ளெனவே டுருவா கிடவே
இருபே ரொருமா மணவாளா

பொருளோ மதியா கொடுசூ ரமரே
புரிவா னிவனோர் திருமேனி

புடைசூ ழரவா பரனை பதியோன்
புகழாந் திருமால் மருகோனே

அருளா கிடுமா மறையோ திடவே
அதுநா ணடனை கதிர்காமா

அமரா பதிபோ லிதுதா னெனவே
அழகா புரிவாழ் பெருமானே

சிறுவயல்.

தன்தனன் தான்தன தன்தன்ன் தான்தன்
தனதனன தானதன தன்தானை

பழிநிலையி லேயலைவ ரொருவழியி லேதெளிவு
பதநிலையை யாரறிவ ரறியாயோ

படிபலதி ராசுமுனே முடிவதுபெ ருதுமனே
பரமகரு ணாகரனென் குருநாதா

விழிகுவளை சேலைநிகர் தனமசையு மேருகிரி
வெடுவெடென பேசுகிற விலைமாதர்

வெகுவிலையை யேபெறுவ ரவர்மயலி லேதிரிய
வெகுமிடியி லேயுழல விடலாமா

வழிதவறு சூரனிரு பதுபுயமு மோர்பதுகை
வரிசைதலை போய்விழவெய் திருமேனி

வடிவழகு நாகபட மிடைகடலி லேதுயிலு
வலியதிரு மால்புகழு மருகோனே

செழிசபையி னுர்பலரு மிகுநகைக ளேபுரிய
திருநடன மாடிவரு கதிர்காமா

திகழுகனி சோலைநிறை புவியர்மிடி யேதணிய
சிறுவயலி லேவளரு பெருமானே

நாட்டரசன்கோட்டை.

தாத்ததன தாத்ததன தாத்ததன தாத்ததன தனதான

ஏக்கமொடு வாய்க்குளறி
யேற்பவரை சீச்சியென லறியாயோ

ஏட்டுவழி பார்க்கதவ
மீட்டுமன னேக்குதுரை குருநாதா

காக்கைகிளி யோட்டிதினை
காட்டிலுறு வேட்டைகுல குறமாது

காட்டமுனி வேட்கையுற
காத்துகளி யாட்டியணை மணவாளா

மூர்க்ககுண சூர்ப்பநகி
மூட்டுமய லாற்றிரிய திருமேனி

மூக்குமுகை வீழ்த்தரவ
மூர்த்திபட மேற்றுயில்வன் மருகோனே

நாக்குளர வேச்சபைமு
ளூட்டிவிளை யாட்டரவ கதிர்காமா

நாற்றிசையி லூர்ப்பெருக
நாட்டரசன் கோட்டைவளர் பெருமானே

கருங்குளம்.

தனந் தனந் தனந் தனந் தனந் தனந் தனதான

கொடும் பணம் பதந் தொழுங்
குலஞ் சினம் அறியாயோ

கொழுந் திடுஞ் சிவன் றவங்
குணம் பெறுங் குருநாதா

திடங் கனம் பொலிந் திடுந்
திறந் தனங் குறமாது

தினம் பழுந் தரும் புனந்
திரும் மணம் மணவாளா

நடுங் குடம் பொடுஞ் சினந்
துரிந் தவன் திருமேனி

நலந் தருஞ் சொலன் புடன்
நடந் தவன் மருகோனே

கடுந் தவன் முனங் கொடுங்
கரும் படங் கதிர்காமா

கலங் துறுந் தனந் தவங்
கருங் குளம் பெருமானே

மங்கலம்.

தந்தனத் தனதன தந்தனத் தனதன
தந்தனத் தனதன தனதானு

இங்கிதச் சுவைபொழி கின்றநற் கவியதை
எங்கெனத் தெரிகில தறியாயோ
இன்புளத் தொழுகிற தம்பதித் தரிசன
மென்றிதுப் பொதுநட குருநாதா
செங்கரக் கவணெறி யும்புனத் துலவிடு
செம்மதித் திருமுக குறமாது
செங்கனிச் சுவையித ழுந்தரப் பருகிய
செங்கரப் புயமணி மணவாளா
பொங்கெழுக் கொடியவன் லங்கையக் குலமழி
பொங்கிடத் தொடுகணை திருமேனி
பொங்கிடுத் திரைகட லம்படத் திடமிடை
பொன்னுடைத் துயிலுவன் மருகோனே
மங்கிடப் பொதுமறை யங்கெதிர்த் தவர்முனம்
மன்றெனக் குலவிய கதிர்காமா
மஞ்சளுற் பவவய லுஞ்செனெற் பொழிவுறு
மங்கலப் பதிவளர் பெருமானே

அரமனைச்சிறுவயல்.

தன்தனத் தன்தனத் தனதனத் தனதானு

எழுமெனக் கவிசொலப் பலரெதிர்த் திடலிதற்
கெதுசொலிக் குறைதவிர்ப் பறியாயோ
இருளுளக் கடுமனப் பெருவழித் திருவுறப்
பிளகிடப் பொதுநடக் குருநாதா

குழுவிடச் சிறுநகைக் காமநிற் கவணெறிக்
குரலிடுக் குயிலினக் குறமாது

குலவிடத் திரிவனத் தெனவுருப் பொடுவரக்
குமரிநற் புயமணக் குமரோனே

பழுதிடுக் கொடியர்கள் கிளைதலைச் சிதறிடப்
படுகளத் ததரிடத் திருமேனி

பலதிரைக் கொதிகடற் றனிலொருக் கொலரவப்
படமிடைத் துயிலுவர்க் கினியோனே

அழுதிடப் பொதுசபைக் கொடுவழக் கதைதவிர்த்
தலறிடத் திருவளர்க் கதிர்காமா

அதிருசிக் கனிநிறைத் திடமழைப் பொழிவளத்
தரமனைச் சிறுவயற் பெருமானே

பூங்குடி.

தாந்தனத் தானதந் தாந்தனத் தானதந் — தனதான

எங்கிநிற் பாரையன் போர்ந்தனைக் காதநெஞ்
சேங்கிவிக் காகிவம் பறியாயோ

இங்குவிற் பேமனந் தாங்கிகற் போடுபஞ்
சேந்திர்யமுத் தாய்வருங் குருநாதா

சாந்துபொட் டேமுகம் வீங்குகச் சேதனஞ்
சார்ந்துமுற் றுள்புனங் குறமாது

சாய்ந்துதொட் டான்மதன் கூர்ந்துவிட் டான்முனஞ்
சார்ந்தபொற் றேளினன் மணவாளா

வேந்ததுட் டேசுரன் றீய்ந்துபட் டான்கரன்
வீழ்ந்துவிட் டானெனுந் திருமேனி

வேண்டபற் பாலருஞ் சேர்ந்துகொட் டாணிடும்
வேந்தனுக் கோர்பெருங் குமரோனே

பூந்தமிழ்ச் சாலைமுன் னேர்ந்தவொட் டாமும்
பூண்டவர்ப் பானடங் கதிர்காமா

பூங்கமழ்ச் சோலையும் தேங்கமழ்ச் சேர்வளம்
பூங்குடிக் கோவிலின் பெருமானே

ஒக்கூர்

தத்தா தத்தன தத்தா தானன தனதான

கற்போ ரைத்தழு விட்டார் யாருள ரறியாயோ
கத்தா துற்றம னத்தா லேவளர் குருநாதா
விற்கோ ணப்புரு வத்தா ளோர்புன குறமாது
விக்கோ டெக்கிக ரக்கோல் மாகிழ மணவாளா
துற்சா தக்கொடு கெட்டார் போய்விழ திருமேனி
தொட்டா னக்கட லுற்றே வாழ்பவன் மருகோனே
உற்சா கச்சபை முத்தோ டாடிடு கதிர்காமா
ஒக்கூ ரப்பதி பெற்றோர் மாவத பெருமானே

மதகுப்பட்டி.

தனதத் தத்த தான தனதத் தத்த தான தனதான

துறையைப் பற்றி நாவு வுலாக் கத்தி நாடு
துரையைச் சுற்றி வாட லறியாயோ

துணையைப் பெற்று மேலு முணாக் கெட்ட மாய்கை
தொலையப் பக்தி ஞான குருநாதா

பிறையொப் பிட்டகோண ணுதலுற்றிட்ட தோழி
பிசகற் றிட்டு சேரு குறமாது

பிடிகைப் பெற்றுகோலே குளிரக் கக்க லோடு
பிணிபெற் றிட்ட கோல மணவாளா

வறைகட் டற்ற சூா னிருபக் துற்ற தோளை
வதையுப் பட்டு வீழ திருமேனி

வலிவிற் புற்று சீறு மரவப் பக்க மேறி
வடிவைக் குத்தி வாழ்வன் மருகோனே

மறையைக் கத்திகூவி திடமுற்றெருப்ப நாடி
பனதொத் திட்டு கூடு கதிர்காமா

மணமுற் றிட்ட சோலே நிறைவுற் றுக்கு லாவு
மதகுப் பட்டி வாழு மெருமானே

கல்லுப்பட்டி.

தையத் தத்தன தந்தன தந்தன தனதாண

இல்லர்க் குற்றது நன்னற மென்பது அறியாயோ
இல்லைப் பற்றினி லொன்றுவ ழுங்கிடு குருநாதா
செல்வச் செப்பிள மங்கைபு னங்குல குறமாது
செல்லத் தத்துவ முங்கம ழுங்குண மணவாளா
தொல்லைத் துட்டனி லங்கைவ ணங்கிடு திருமேனி
சொல்லச் சக்கர தண்டுநி றைந்தவன் மருகோனே
கல்லொப் பிட்டவர் சங்கைய கன்றருள் கதிர்காமா
கல்லுப் பட்டியி லென்றுவி விளங்கிடு பெருமானே

வெற்றியூர்.

தத்த தான தான தத்த தான தான
தத்த தான தான தனதாண

கட்டி காவி யாடை சுற்றி வீதி யோடி
கத்தி பாடு வார்க ளறியாயோ

கப்பு மூட லான சித்த மாகு மாய்கை
கட்டி லான மோன குருநாதா

தட்டி லாத தோழி குட்டி மார்களோடு
தத்தை போல கூவு குறமாது

தப்பி லாத வேட செட்டி போல மாறி
தர்க்க மாடி கூடு மணவாளா

துட்ட ராகு சூர் மிக்க மாய ராவி
துக்க மாகி வீழ திருமேனி

சொக்கி நீரி ஞழி யுற்று சீறு நாக
தொட்டி லாடு மாலின் மருகோனே

வெட்டி பேசு தீய ரொத்து கூடி நாட
விட்ட லாடு கோல கதிர்காமா

வித்தை ஞான மேவி கற்ப சோலை சூழு
வெற்றி யூரில் வாழு பெருமானே

அரியக்குடி.

தனதத் தனதன தனதத் தனதன
தனதத் தனதன தனதான

உழலுற் றலைகிற பலர்கெட் டறிவினை
யுணரப் பொழுதில ரறியாயோ

ஒருமைப் பெறுமன மதனுட் சிவநிலை
யுறுதிப் பெறுவது குருநாதா

குழலொக் கருநிற முகமொப் பெறுமதி
குயிலைக் கவணெறி குறமாது

குடிசைப் படியினி லொருசெட் டியுமென
குலவிப் புயமணை மணவாளா

சுழலொப் பிடுதலை யொருபத் தறுபட
சுடரொப் பிடுகணை திருமேனி

சுகமுற் றிடதிரை பெருகக் கடலிடை
துயிலுற் றிடுபவன் மருகோனே

அழகுப் பொதுசபை நடமுற் றிடுதிரு
அரவப் படவுரு கதிர்காமா

அணிபொற் பத முட னுறவுற் றிடுகனி
அரியக் குடிவளர் பெருமானே

பலவான்குடி.

தனன தனன தனன தனன தனன தனன தனதான

கவிபா டிடவே செவியா லுணரா
கனவா னுறவே னறியாயோ

கலையா லெழுமா மனதோ டினிதாய்
கருணா நிலையே குருநாதா

குவிமா தனமே மலைமா கிரியோ
குயிலோ கிளியோ குறமாது

குணமா தவமோ ஒருமா கிழமாய்
குறியோ தியவா மணவாளா

புவியோர் குடைகீ ழரசாள் கிறசூர்
பொடியாய் விழவே திருமேனி

புடைசூழ் திரைபோ ரிடுமா கடலே
புரிவோன் றுயிலே மருகோனே

பவவா திடவே சபைமீ துறவாய்
பட மா டுருவே — கதிர்காமா

பலபே ரறிவே திருநா யகமாய்
பலவான் குடிவாழ் — பெருமானே

சிறுகூடற்பட்டி.

தனனா தத்தத் தனதன தனதன — தனதானா

அலைபோ லைப்பற் றுலகினி லினிவுற
பெருவா ரிக்கற் றலைகிற வகையின
ரறிவா ளிச்சப் பெனநினை வுறுவது — மறியாயோ

அமைநா ளூற்றுச் சிவமன நிலைபதி
தெளிவா கிப்பற் பலவழி நெறிமுறை
அறிவோ டொத்துக் குலவிடு வொருகுண — குருநாதா

பலதோ ழிச்சுற் றிடதினை புனமதில்
கிளிகோ தக்கற் கவணெறி கிறகர
பலமா கக்கத் திடுகுயி லினமெனு — குறமாது

பணிவா கச்செட் டியினுரு வளையொடு
விலைகூ றிப்பற் பலகளி நகைபுரி
பரிவா கக்கட் டிடபுய மணைகிற — மணவாளா

குலசூ ரக்கொற் றவனுட னமரிட
மலைபோ லப்பொற் கலனணி முடிவிழ
கொடுபா ணத்தைச் சுடவிடு கிறபொது — திருமேனி

குணமோ டுச்சர்க் கரைமொழி திருமக
ளவளோ டுச்சற் றினிவுற மதிமுக
கொடுநா கத்துற் றணைகிற கடலினன் — மருகோனே

சிலபோ லிச்சொற் களோபுரி கிறசபை
மிகுவா தாப்பெற் றழுதிட கதறிய
சிறியே ணேப்பற் றொடுதழு வியதவ — கதிர்காமா

திகழா கக்கொட் டிடுமழை கழனிக
ளூறவா கப்பெற் றிடகய லினமுறு
சிறுகூ டற்பட் டியிலுறு திருநட — பெருமானே

ஆருவயல்.

தானு தனனு தானு தனனு தானு தனனு — தனதானு

ஏகா தியரா யோதா துணரா
தீடா கிடுவா — ரறியாயோ

ஏதோ ரறிவே நேரு கிடவே
ஈதோ ரிடமே — குருநாதா

வாகா ளழகே கூறே விழியே
வாய்கூ விடுவாள் — குறமாது

வானு டுறவே யோர்வே டனுமாய்
வாதா டிடுமா — மணவாளா

மோகா தியனே சூரா திபனே
மூதூர் செலவே — திருமேனி

மோரே தயிரே பாலே வெணேயே
மோகான் ருசியோன் — மருகோனே

ஆகா தவ்ரே வர்தா டிடவே
ஆகா யெனனேர் — கதிர்காமா

ஆரு தாமே பேரு நிலேயே
ஆரு வயலூர் — பெருமானே

தேவக்கோட்டை

தானத் தாத்த தானத் தாத்த தானத் தாத்த தந்தான

வேதப் பாட்டை யோதக் கேட்டு
வேலைப் பார்ப்ப ரறியாயோ

வீடைக் கோர்த்து மூடப் பூட்டு
வீதிக் கேட்டு குருநாதா

காதற் கேற்ற போரைப் போர்த்த
கர்மக் கூற்று குறமாது

கர்ணக் காட்டி லோடித் தேட்ட
காளைக் கூட்டு மணவாளா

வாதைச் சீற்ற சூரைத் தாக்கி
வாழ்வைப் போக்கு திருமேனி

வானத் தோற்ற னீலப் பூச்சு
வாகற் கேற்ற மருகோனே

சீதப் போற்று வாதுப் பேச்சு
சீறச் சேர்த்த கதிர்காமா

சீமைத் தோட்ட மாகிப் பார்த்த
தேவக் கோட்டை பெருமானே

விராமதி.

தனதன தனதன தனதன தந்தான

அடாதிரு விழாவெது அதாயிது அறியாயோ

அணுகிய பராபர அதி தய குருநாதா

கொடாதுவு றவாடினி குலாவுறு குறமாது

கொளாத்தை பெருத்தை குணகர மணவாளா
சுடாமணி பளீரென சுகோதயன் திருமேனி
சுகா சுக தயாநிதி சுபாசுபன் மருகோனே
விடாநிலை சதாதுதி விதா வித கதிர்காமா
விளாகனி பலாபல விராமதி பெருமாளே

ராங்கியம்.

தாந்தனத் தானன தாந்தனத் தானன தனதானா

வாஞ்சைசொற் காதல ராங்குறிப் பாளிக ளறியாயோ
வாழ்ந்துபற் றேமன மோர்ந்துசித் தாகிடு குருநாதா
தீஞ்சொலுற் றேபுன மேந்துகற் கோலெறி குறமாது
தீண்டசற் றோர்புற மேங்கிபொற் றோளணை மணவாளா
பூஞ்செழிச் சூர்குல ராந்தலைப் போய்விழ திருமேனி
பூம்பொழிச் சீர்கட லாந்துயிற் கோலவன் மருகோனே
மாஞ்சுழிப் பேசிட வோங்கிசித் தாடிடு கதிர்காமா
மாங்கனித் தேனிறை ராங்கியத் தேவளர் பெருமானே

பூலாங்குரிச்சி,

தானந் தனத்த தான தனதன தனதான

வேதாந் திகட்கு நூலா தரவெது அறியாயோ
வீடாங் குடிக்கு ளூடா டிடுசிவ குருநாதா
காதாங் கொடிக்கு நேரா கிடுமிள குறமாது
காமாந் தரத்தி லோடோ டியுமணை மணவாளா
பீதாம் பரத்த னுழா ழியிலணை திருமேனி
போராம் படைத்த வோரா யிரமவன் மருகோனே

போதாஞ் சபைக்கு சூதார் முனமெழு கதிர்காமா
பூலாங் குரிச்சி வாழ்வே பொதுநட பெருமானே

பொன்னமரவாதி.

தந்தன தானன தந்தன தானன
தந்தன தானன தனதான

தொங்கிட வேவுட லின்பசி கேளென லறியாயோ
சொந்தமு மாகிடு தம்பதி யோர்மன குருநாதா
செங்கர மேகவ ணும்மெறி கோமள குறமாது
தெந்தன கோலுட லுங்களி தோளணை மணவாளா
பங்கர னேகொடு லங்கைய னேடமர் திருமேனி
பஞ்சணை மேல்துயி லுங்கிரு மால்புகழ் மருகோனே
பொங்கிடு மாசபை யின்முன மேநட கதிர்காமா
பொன்னம ராவதி யும்வளர் கோ னெனும் பெருமானே

நெற்குப்பை.

தத்தத் தத்தன தானன தனதன தனதான

கற்கட் டிச்சுவ ராள்வாரு மிலையிது அறியாயோ
கட்டப் பட்டவ ரேகாண்ப ரவரவர் குருநாதா
நற்புத் திப்பெறு சேலாகு மிருவிழி குறமாது
நட்புப் பெற்றிட காலோடி புயமணை மணவாளா
துற்புத் திக்கொடு சூரோடு வமர்புரி திருமேனி
சொர்க்கத் தக்கடல் மேல்வாழு முகிலினன் மருகோனே
நிற்கப் பொற்சபை மேலாடி நடமிடு கதிர்காமா
நெற்குப் பைப்பதி யேமாரி பொழிவளர் பெருமானே

மேலைச்சிவபுரி.

தானத் தனதன தானத் தனதன
தானத் தனதன தனதான

கூளக் குலவிடு வேடக் கபடினர்
கோலப் படிமிசை அறியாயோ

கோதற் றிலகிடு னீதத் திருமன
கோவிற் பதிசிவ குருநாதா

வாளைக் கொடுவிழி மாலைப் பிறைநுதல்
வாடிக் கவணெறி குறமாது

வாதைப் படமய லாகிக் கனதன
வாரைத் தழுவிய மணவாளா

நாளைக் கொடுயெம லோகப் புறமுற
நாடிக் கணைவிடு திருமேனி

நாதத் திரைகட லாழப் படமொரு
நாகத் தணைபவன் மருகோனே

மேளத் திருநட மாடிப் பொதுசபை
மேவித் திருவளர் கதிர்காமா

மேகக் கருநிற மாகிப் மொழிமழை
மேலைச் சிவபுரி பெருமானே

வலையப்பட்டி.

தனதத் தத்தனன தனதத் தத்தனன
தனதத் தத்தனன தனதான

உடையைக் கட்டிகாவி யிடையைச் சுற்றிமூடி
உளறிக் கத்திவாட லறியாயோ

உடலொப் பிட்டமாய்கை தனைவிட் டுற்றுதேறி
உடனொப் பிட்டசீவ குருநாதா

நடையொப் பிட்டவேளை யனமொத் திட்டுகூசு
நகையொத் திட்டசீத குறமாது

நலியப் பெற்றுதேக வலையிற் சிக்கிகாம
நடையைக் கட்டிகூடு மணவாளா

துடையைத் தட்டுசூர ரிடரைப் பற்றிபோரில்
தொலையச் சுட்டதேவ திருமேனி

துவளச் சற்றுபாயி லிறுகக் கட்டிநாக
துளபப் பற்றுமாலின் மருகோனே

வடிவைப் பெற்றுநேரி லுருவைத் துட்டர்காண
வரவிக் கிட்டுகூடு கதிர்காமா

வளரச் சுற்றிமேக மழையைக் கொட்டிதூவ
வலையப் பட்டிமேவு மெருமானே

ஆத்திக்காடு தெக்கூர்,

தாத்தத் தானன தத்தா தனதன தனதான

போற்றிக் காவிய சொற்பே சிடசின மறியாயோ
பூத்துக் காய்கனி நட்பா கிடுமன குருநாதா
கூற்றுச் சேல்விழி செப்பே கனதன குறமாது
கூத்துக் கோலொடு விக்கா கிடுகிழ மணவாளா
தோற்றுச் சூரொரு மித்தே படிவிழ திருமேனி
தூக்கிச் சீர்பட மிட்டே துயிலுவன் மருகோனே
ஆற்றப் போழ்திலை யப்போழ் தருநட கதிர்காமா
ஆத்திக் காடொடு தெக்கூர் பதிவளர் பெருமானே

அழகாபுரி. (நாட்டரசன்கோட்டை)

தனனா தனனா தனனா தனனா தனனா தனனா தனதானா

உளதா மெனவே கவிபா டிடிலோ
உலகோர் நகையே னறியாயோ

உளவீ டுறவா யெழுமா மனதே
வுறுசீ வனுமே குருநாதா

கனமா தனமே மதிமா முகமே
கலைமா னினமே குறமாது

கரிமா முகனேர் வரவே பயமாய்
கலைசோ ரணிவான் மணவாளா

சினசூ ரடியோ டழிபோய் விழவே
திகழா கிடுகார் திருமேனி

திரைசூழ் கடலோர் கொதிசேர் புறமாய்
சிறுநாள் துயில்வோன் மருகோனே

அனலாய் சபைநே ரதிரா கிடுமோ
ராவா பரணா கதிர்காமா

ஆதிமா மழையே பொழிதேன் கனிசூழ்
அழகா புரிவாழ் பெருமானே

உலகம்பட்டி.

தனதந் தத்த தந்தன தனதந் தத்த தந்தன
தனதந் தத்த தந்தன தனதானா

குளமும் வெட்டி மந்தர செபமுங் கொட்டி தந்திர
குணமும் கெட்ட வஞ்ச ரயர்வோ

குல்மும் பற்ற கன்று மனமுஞ் சுட்டொ ழிந்து
குலவுங் கட்ட விழ்ந்த குருநாதா

வளமுங் கட்ட டர்ந்த தனமுங் கச்ச ணிந்த
வனமுங் கத்து கின்ற குறமாது

வடிவும் பட்டெ ழுந்து மயலுஞ் சிக்கி யன்று
வளரும் சித்த மைந்த மணவாளா

களவுங் கற்ற வம்ப ருடலுங் கொத்தி தின்ற
கழுகுங் கத்த வென்ற திருமேனி

கதையும் பட்டொ ழிந்த தெனவுஞ் சற்ற யர்ந்து
கடலும் பெற்ற வன்றன் மருகோனே

உளமும் பட்டு நைந்து மிகவுங் கத்து மன்று
உருவங் கட்டி வந்த கதிர்காமா

உதயஞ் சத்து யெங்கு மழையுங் கொட்டு கந்து
உலகம் பட்டி நின்ற பெருமானே

கொப்பனுப்பட்டி.

தத்தன தத்தன தனதான

பெற்றதார் சுற்றமா ரறியாயோ
பித்துதே ருற்றுபார் குருநாதா
பற்றுவாய் கத்துவாள் குறமாது
பக்தியாய் தொட்டவோர் மணவாளா
ஒற்றுசூர் பட்டகார் திருமேனி
ஒப்பிகூ டிட்டவோர் மருகோனே
கொற்றவா ரப்பனே கதிர்காமா
கொப்பனு பட்டிவாழ் பெருமானே

காளையார்மங்கலம்.

தானனா தந்தன தானனா தந்தன தானனா தந்தன தனதானா

வானமே தங்கிலு மாசையோ பொங்கிடும்
வாழ்வதே னென்பதை யறியாயோ

வாடியோ டுங்குண மாறினா லங்கெழும்
வாழ்வுமோர் மங்கள குருநாதா

இனமா குங்குல நாணமே கண்டில
ரீருபே சுந்திரு குறமாது

இடுமோ கம்மெற வேடனாய்க் கொண்டுரு
ஏகபோ கம்பெறு மணவாளா

தானமோ லங்கையன் சூழமு லம்பட
தாவிபோ ரும்புரி திருமேனி

தாளமோ துந்திரை சீறுநா கம்பட
தாவுகோ தண்டனின் மருகோனே

கானமே வுங்கொடு சூதுபே சுஞ்சபை
காணநே ருந்தவ கதிர்காமா

காடுமே டும்மழை பேயவே ணுங்கனி
காளையார் மங்கல பெருமானே

சண்முகநாதபுரம்.

தந்தன தானதான தந்தன தானதான
தந்தன தானதான தனதானா

அங்கியை காவிபூசி சங்கர நாமமோதி
அஞ்சிடு சாமியார்க ளறியாயோ

அன்பமை சீவனேடு நம்புவ தோர்மைஞான
அங்கனி யானமோன குருநாதா

செங்கனி போலவாய லின்குர லோசைவீணை
சிந்துக ளாககூவு குறமாது

செங்கர கோலுமாகி வந்தொரு மாயரூப
தெந்தன மாடிகூடு மணவாளா

பொங்கொடு சூரசேனை வந்தெதி ராகமாள
பொந்திடு பாணநாத திருமேனி

பொங்கெழு மாழிநாக பஞ்சணை மீதிலேறி
புன்னகை யானமாலின் மருகோனே

சங்கட சூதுவாது கொண்டுள தானதேவ
தன்சபை மீதிலாடு கதிர்காமா

சம்ரம மாகிமாரி யும்பொழி வானைபாயு
சண்முக நாதபூர மெருமானே

பரியாமருதப்பட்டி.

தன்ன தனதத் தன்ன தனதத்
தன்ன தனதத் தனதான

வழிநே ரதுவிட் டப்புற மென்பவ ரறியாயோ
வகையோர் மனதுற் றத்தவ மங்கள குருநாதா
விழிசே லெனவொப் பிட்டவ ளுங்குல குறமாது
வெகுபா டதுபட் டொப்பிம ணந்திடு மணவாளா
குழிசே ரெனவிட் டக்கணை வென்றவன் திருமேனி
குகனே டுறவுற் றப்பெரு சுந்திரன் மருகோனே
பழியோ திடுதுட் டர்ப்பொது கின்றிடு கதிர்காமா
பரியா மருதப் பட்டிவி ளங்கிடு பெருமானே

லக்குமிபுரம். (கொத்தமங்கலம்)

தனதன தத்தன தனதன தத்தன
தனதன தத்தன தனதான

அகமது வெட்கிட பொருள்பெற லிப்புவி யறியாயோ
அடைவது தத்துவ பரவெளி யுற்புவ குருநாதா
முகமிது கற்பமை புனமுறு விற்பன குறமாது
முகையைய ணைத்தவ ளிதழமு ண்டிப்பெறு மணவாளா
சுகமுறு துட்டரின் முடிவிழ வைத்தொளிர் திருமேனி
சுருதிக ளொப்பிட கடலைய ணைத்தவன் மருகோனே
திகிலுறு பொற்சபை முனைமெழு சித்துரு கதிர்காமா
திருவுரு லக்குமி புரமதி லுற்றிடு பெருமானே

தேனிப்பட்டி.

வாடிப் பக்குவ ராகித் திரிபவ ரறியாயோ
வாழ்வுப் பொற்குண மானத் திருமன குருநாதா
கூடிக் கற்பமை தோழிப் படையினள் குறமாது
கோலுற் றப்புன மேவிப் புயமணே மணவாளா
நாடிச் சுற்றிய மூலப் படையழி திருமேனி
நாதத் துட்கட லேறித் துயிலுவன் மருகோனே
தேடிப் பொற்சபை யாரொப் பிடநட கதிர்காமா
தேனிப் பட்டியி லேசித் துருவளர் பெருமானே

நடராஜபுரம்.

தனதான தனதான தனதான தனதான
தனதான தனதான் தனதான

வகைமோச மிடைகாவி துணிவேட மணிவாரும்
வுறவீதி திரிவார்கூ ளறியாயோ

வழிதேட யிகபோக தவநீத பொருளாகும்
வடிவான மனசிவ குருநாதா
முகைமேரு கிரியாகு கொடிபோல யிடைதோணு
முகமீது ஒளிவீசு குறமாது
முடியாத நடையாகி கிழரூப மொருவேட
முனியாகி புயமேவு மணவாளா
பகையான கொடுசூர ரொருகோடி யடியோடு
பழிதீர வுருவான திருமேனி
படியாத கடல்மீது மிகசீறு திருநாக
படமீது துயில்வோனின் மருகோனே
நகைபேசி சபைமீது பலசூத ருறவாட
நடமாடி விளையாடு கதிர்காமா
நதிபாய மழையேவி கனிசோலை வளமாக
நடராஜ புரமேவு பெருமானே

புதுப்பட்டி. (பொன்னமராவதி)

தனத் தத்தன தந்தன தந்தன தனதான

விதிப் பற்றினி லென்றும லைந்தவ ரறியாயோ
விடப் பற்றெது வொன்றும னந்திரு குருநாதா
திதிப் புற்றவ ளுங்குல புன்னகை குறமாது
தினைப் புத்தினி லொன்றுக லந்தணை மணவாளா
கொதிச் சுட்டயி லங்கைய தம்பெறு திருமேனி
கொடுச் சத்தமி டுங்கட னின்றவன் மருகோனே
பொதுப் பொற்சபை யன்றுவி ளங்கிய கதிர்காமா
புதுப் பட்டியி லென்றும ணந்திடு பெருமானே

மகிபாலபட்டி.

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த தனதான

தெரியாத வித்தை யுணர்வோடு கற்று
தெளியாத பித்த ரறியாயோ

திமிராம சுத்த மனமாய்கை யற்று
தெவிடா தினித்த குருநாதா

விரியாத செப்பு மலர்தா மரைக்கு
வெருளாத னத்து குறமாது

விரைவோட டுத்து முகமோக ளிக்க
விழியால ணைத்த மணவாளா

உரிமீது வைத்த நவநீத வெற்றி
யுளவாக பெற்ற திருமேனி

உரலோடு கட்டி பலகோபி குட்ட
உலகாளு மச்சன் மருகோனே

மரியாதை யற்று சபைமீ தெதிர்க்க
மகிழாய்ந டித்த கதிர்காமா

மழையோபொ ழித்து கனிசோலை யுற்ற
மகிபால பட்டி பெருமானே

பனங்குடி.

தனந்த தனதான தனந்த தனதான
தனந்த தனதான தனதான

வியந்து தனவானை புகழ்ந்து கவிபாடி
வெதும்பி திரிவார்க ளறியாயோ

விரிந்து மனமாய்கை கசந்து வரஞான
விளங்கு மொருமோன குருநாதா
நயந்து மொழிபேசு கனிந்த குரலோசை
நகர்ந்த குயிலாகு சுரமாது

நடந்து விரைவாக அடர்ந்த புனமீது
நலிந்த கிழரூப மணவாளா

புயங்க ளறவீழ சினந்த குலனுவி
பொருந்த கணையேவு திருமேனி

பொரிந்த கடல்மீது மணந்து படநாகம்
புனைந்து துயில்வோனின் மருகோனே

பயந்து சபையாரு முணர்ந்து தெளிவாக
பறந்து நடமாடு கதிர்காமா

பதிந்து மழைவாரி பொழிந்து நிறைசோலை
பனங்கு டியில்வாழு பெருமானே

வேந்தப்பட்டி.

தாந்தத் தத்தன தந்தன தந்தன தனதானு

தூங்கக் கற்றவ ரென்றும லைந்தவ ரறியாயோ
தோன்றச் சித்தமி ருந்துக சிந்தெழு குருநாதா
பாங்கிக் குட்டிக ளொன்றுக லந்துறை குறமாது
பாய்ந்துப் பற்றெடு வென்றும ணம்புரி மணவாளா
தீங்கைச் சுட்டொழி லங்கைய னின்குல திருமேனி
தேர்ந்துச் சக்கர தண்டம ணிந்தவன் மருகோனே
வீங்கப் பொற்சபை வந்துந டம்புரி கதிர்காமா
வேந்தப் பட்டியி லென்றுவி ளங்கிடு பெருமானே

வேகுப்பட்டி.

தானத் தத்தன தானன தானத் தத்தன தானன
தானத் தத்தன தானன தனதானு

காணப் பக்கம தாய்கன வானைச் சுடடிய காவிய
காத்ற் பத்தது பாடுவ ரறியாயோ

காதற் கெட்டறி வானது தேகச் சட்டையிலூறிட
காணக் கிட்டிடு மோர்சிவ குருநாதா

கோணக் கொப்புடையாள் தன மீறிக் கச்சணி வார்கிழி
கூடச் சிற்றிடை யோகொடி குறமாது

கோலச் செட்டியை போல்வளை கூவப் பொற்கொடி யாள் மகிழ்
கோபப் பற்றொடு தோளணை மணவாளா

நாணச் சத்துரு சூர்குல வேரைக் கொத்திதி ராவிய
நாதப் பட்டுபி தாம்பர திருமேனி

நாலுத் திக்குள தேவர்க ளேகப் பற்றொடு வாழ்கிற
நாமச் சக்கர பாணியின் மருகோனே

வேணத் துட்டர்கள் சூழ்சபை காணக் கற்பர வானபின்
வேதப் புற்றினி லாடிய கதிர்காமா

வேகப் பற்றொடு மாமழை தூவிக் குட்டைக ளேநிறை
வேகுப் பட்டியில் மேவிய பெருமானே

சிறுவயல்.

தனதன்ன தானதன தனதானு

அனுவசிய வேடமதை அறியாயோ
அதீதபர மோனவொளி குருநாதா
வினுவகொடு கோபமுள குறமாது
விடாதுபிடி தோளணையு மணவாளா
பனுதிகுல வேரையழி திருமேனி
பனுமுடிய ராவணையன் மருகோனே
சினுகார்மு னேநடன கதிர்காமா
சிறுவயலி லேவளரு பெருமானே

பிள்ளையார்பட்டி.

தையதா தத்தன தனதான

கள்ளபோ திப்பதே னறியாயோ
கள்ளமாய் கைக்குமோர் குருநாதா
வள்ளிநா மத்தினுள் குறமாது
வள்ளலாய் பெற்றதோள் மணவாளா
தள்ளசூ ரர்க்கொலோ திருமேனி
தள்ளுமால் சக்கரோன் மருகோனே
பிள்ளைநே ருற்றதேன் கதிர்காமா
பிள்ளையார் பட்டிவாழ் பெருமானே

செவ்வூர்.

தையா தனதன தனதான

ஒவ்வோ ருருவரை அறியாயோ
ஒவ்வோர் மனமுறு குருநாதா
சவ்வா தணிநுதல் குறமாது
சவ்வா லொடுதொடு மணவாளா
எவ்வா தனையற திருமேனி
இவ்வா றுறுபவன் மருகோனே
செவ்வாய் முகமணே கதிர்காமா
செவ்வூர் பதியுறை பெருமானே

லக்குமிவரம். (நெய்க்குன்னம்)

தன்ன தத்தன தனதன தந்தன தனதான

நிதியார் கற்றவ ருளரவ ரற்பம தறியாயோ
நினைவே பெற்றநி லெழுகிற வுற்பவ குருநாதா
மதிபோ லொத்திடு முகமது கற்பமை குறமாது
மயலா கிப்புண மணுகிய ணைத்திடு மணவாளா
சதியோ சித்திடு கொடுகுல முற்றழி திருமேனி
சபைநா கப்பட மிடைதுயி லுற்றவன் மருகோனே
புதிதாய் பொற்சபை முன்நட மிட்டிடு கதிர்காமா
புதுவூர் லச்குமி புரமதி லற்புத பெருமானே

(இன்னும் வரும்)

அன்போடு உபசரித்தும், உபசரிக்கும் அன்பர்கள்

பட்டமங்கலம் (அட்டமாசித்தி)

வீர. சொ. ராம. காசி செட்டியார்
பெரி. கு. சோமசுந்தரஞ் செட்டியார்

கருங்குளம்.

நா. செ. நாராயணஞ் செட்டியார்
பெரி. நா. ராம. கருப்பையா செட்டியார்

சோக்கனாதபுரம்.

செ. ராம. முருகப்ப செட்டியார்

செம்பனூர்.

குமா. நா. சுப. நாச்சியப்ப செட்டியார்

கல்லல்.

ஆத. நா. சொக்கலிங்கஞ் செட்டியார்
சின்ன சோமையா செட்டியார்

நாட்டரசன்கோட்டை.

இராமஞ் செட்டியார்

அழகாபுரி (நா)

கரு. கண. கண்ணப்ப செட்டியார்

சோழபுரம்.

சுப. க. அ. இராமன் செட்டியார்

பூங்குடி.

கூ. அரு. க. சுப்பையா செட்டியார்
கூ. கரு. நா. சிதம்பரஞ் செட்டியார்

பாகனேரி.

மு. நா. மு. சொக்கலிங்கஞ் செட்டியார்

ஆவணிப்பட்டி.

பழ. அ. பழனியப்ப செட்டியார்
பெ. பெரி. சுப்பிரமண்யஞ் செட்டியார்
கு. பெரி. சின்னையா செட்டியார்
ந. மு. மு. கருப்பஞ் செட்டியார்
முரு. லெட்சுமணஞ் செட்டியார்

கடியாபட்டி.

பி. சு. இராமன் செட்டியார்
உ. அ. அண்ணாமலை செட்டியார்
மு. மு. கு. சுப. சுப்பையா செட்டியார்
சித. இராமன் செட்டியார்

பள்ளத்தூர்.

அ. மு. ப. அமு. முருகப்ப செட்டியார்
க. கு. காசி செட்டியார்

கோட்டையூர்.

வெ. சி. அ. இராமன் செட்டியார்

கண்டரமாணிக்கம்.

செ. சி. நா. இராமசாமி செட்டியார்

கோத்தமங்கலம்.

ராம. சு. இராமஞ் செட்டியார்
சி. அ. சி. இராமஞ் செட்டியார்
சி. அ. சி. காசிவிஸ்வநாதஞ் செட்டியார்
சி. சு. சி ராம. காசி செட்டியார்
சித. முத்துகருப்ப பிள்ளை

கோனபட்டு.

மெ. மு. மு. அ. முத்தையா செட்டியார்
கி. நா. இராமையா செட்டியார்
மு. பெ. வீர. அழகிரிசாமி வேளார்
சுப. கு. சொக்கலிங்கஞ் செட்டியார்
பி. மு. பி. சு. சுப்ரமண்யஞ் செட்டியார்

நச்சாந்துபட்டி.

சா. வீர. அ. வீரப்ப செட்டியார்

குருவிக்கொண்டான்பட்டி.

கும. கருப்பஞ் செட்டியார்
கும. சிதம்பரஞ் செட்டியார்
அள. லெட்சுமணஞ் செட்டியார்

கண்டவராயன்பட்டி.

கரு. பெரி. சி. முத்தையா செட்டியார்
பாத்திரக்கடை. செ. சுந்தரராஜ ஐயங்கார்
,, சு. பலவசம் ஆசாரி
,, க. பிரமுத்த ஆசாரி

கீழச்சேவற்பட்டி

க. தெ. நா. தெ. அழகப்ப செட்டியார்
மு. சா. மு. மு. கருப்பஞ் செட்டியார்
அ. அள. சொக்கலிங்கஞ் செட்டியார்
சி. கரு. சி. இராமஞ் செட்டியார்
நா. கி. வெள்ளையப்ப செட்டியார்
க. தெ. நா. அங்கப்ப செட்டியார்
க. ராம. மு. இராமன் செட்டியார்
கா, அள. கருப்பஞ் செட்டியார்
மு. சா. இராமஞ் செட்டியார்
மோட்டார்டிரைவர் மீனாக்ஷிசுந்தரம்

3b.417
N33

முத்துப்பட்டணம் (காரைக்குடி)

பெரி. நா. நா. அ. தேவராஜன் செட்டியார்

சிறுவயல்.

கரு. வெ. சிதம்பரஞ் செட்டியார்

பனையப்பட்டி.

சுப. அண்ணாமலை செட்டியார்

ஓதுவார் வீராசாமி பிள்ளை

அமராவதிபுதூர்.

சுப. அ. சுப. கண்ணப்ப செட்டியார்

ராம. அ. நாராயணன் செட்டியார்

நேமுத்துப்பட்டி.

சி. வீ. நா. பழனியப்ப செட்டியார்

செ. ராம. சு. சுப்ரமண்யஞ் செட்டியார்

பலவான்குடி,

கு. வெ. காசி செட்டியார்

மெ. வெ. சண்முகஞ் செட்டியார்

சோக்கலிங்கம்புதூர்.

நா. பழ. வீர. முத்தய்யா செட்டியார்

அள. ராம. நாகப்ப செட்டியார்

இராயவரம்.

68

அ. கு. அரு. காசி செட்டியார்

ராம. அரு. இலக்ஷமணஞ் செட்டியார்

ப. வ. அழகப்ப செட்டியார்

அரு. முருகப்ப செட்டியார்

சு. க. சுப. சுப்ரமண்யஞ் செட்டியார்

குறைந்த சார்ஜ்.

சிறந்த வேலைகள்.

கணேசர் அச்சுக்கூடம்,

காரைக்குடி.